# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI.

| MCOP. No. 128/2013 c/w 127/2013 | | | |
|---|---|---|---|
| Name: | சுப்ரமணி | Religion: | இந்து |
| Father's Name: | முத்துக்கவுண்டர் | Caste: | |
| Village: | கத்தேரி | Calling: | தறி வேலை |
| Taluk: | சங்ககிரி | Age: | 49 |

Date: 10.1.2020 – PW –1

மனுதாரர் தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து நடந்த அன்று நான் எங்கிருந்து எங்கு போனேன் என்றால் ஓமலூர் தாண்டி தறி பார்ப்பதற்காக ஒரு ஊருக்குப் போனேன். நெய்காரப்பட்டி என்று சொன்னார்கள். எந்த தேதியில் சென்றேன் என்றால் 24.5.2012 ம் தேதி மதியம் வீட்டில் இருந்து கிளம்பினேன். எந்த வண்டியில் சென்றேன். மாருதி ஆம்னி வேனில் சென்றேன். அது யாருக்கு சொந்தமானது என்றால் சரவணவேல் என்பவருக்கு சொந்தமானது. அவர் வாடகைக்கு ஓட்டிகிறாரா என்றால் ஆமாம். அந்த வாகனத்தில் யார் யார் சென்றோம் என்றால் நான், ஜோதிகுமார், முனியப்பன், இன்னொரு முனியப்பன், மற்றும் டிரைவர் சண்முகம் ஆகியோர் சென்றோம். எதற்காக போனோம் என்றால் தறி வாங்குவதற்காக போனோம். 25.5.2012 ம் தேதி விடியற்காலை 1 3/4 மணியளவில் அங்கிருந்து கிளம்பினோம். எத்தனை மணிக்கு விபத்து நடந்தது என்றால் விடியற்காலை 2 1/2 மணியளவில் சின்னப்பம்பட்டி பகுதியில் மேட்டுக்காடு என்ற இடத்தில் ஏற்பட்டது. எதிரே வண்டி வருவதை பார்த்தவுடன் தார் ரோட்டில் இருந்து இடது பக்கம் வண்டி கீழே இறங்கி பள்ளத்தில் சென்று பனை மரத்தில் சென்று மோதி விட்டது என்றால் இடது பக்கமாக தார் ரோட்டில் இருந்து இறங்கி மீண்டும் தார் ரோட்டில் ஏறியபோது வலது பக்கமாக சென்று பனைமரத்தில் மோதி விட்டது. அந்த ரோடானது எப்போதும் பெங்களூருக்கு செல்லும் வாகனங்கள், அங்கிருந்து வரும் வாகனங்கள் அதிகமாக வரக்கூடிய சாலை என்றால் ஆமாம். வண்டி ஓட்டி வந்த சண்முகம் மிதமான வேகத்தில் வந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் மிதமான வேகத்தில்தான் வந்தார். நான் டிரைவருக்கு இடது பக்கம் உட்கார்ந்திருந்தேன் என்றால் ஆமாம். நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் ஜோதிகுமார்தான் கொடுத்தார். ஜோதிகுமார் என்னுடன்தான் வந்தார் என்றால் ஆமாம். 25.5.2012 ம் தேதி சம்பவம் நடந்து எந்த தேதியில் புகார் கொடுத்தார் என்றால் 26 ஆக இருக்கலாம். நான் மருத்துவமனையில் நினைவில்லாமல் இருந்ததால் தெரியவில்லை. நினைவு திரும்பிய பிறகு எப்போது புகார் கொடுத்தார்கள் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் அந்த சமயத்தில் தெரிந்து கொண்டேன். தற்போது ஞாபகம் இல்லை. இந்த விபத்து குறித்து 3 நாட்கள் கழித்துதான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. வண்டியை ஒட்டிய ஓட்டுநருக்கு ஓட்டநர் உரிமம் பேட்ஜ் உள்ளதா என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் சரவணவேல் அனுப்பி வைத்ததால் அதை கேட்கவில்லை.

மேற்படி வாகனத்தை ஓட்டிய சண்முகம் என்பவருக்கு வாடகை வண்டியை ஓட்டுவதற்காக பேட்ஜ் இல்லை என்றால் அதை பின்னர்தான் தெரிந்து கொண்டேன். என்ன படித்துள்ளேன் என்றால் 10 வது படித்துள்ளேன். எழுதப் படிக்கத் தெரியுமா என்றால் தமிழ் எழுதப் படிக்கத் தெரியும். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் தறி ஓட்டுகிறேன். சொந்தமாக ஓட்டி வருகிறேன். வீட்டில் 8 தறி வைத்துள்ளேன். எவ்வளவு சம்பாதிக்கிறேன் என்றால் வாரம் ரூ. 6 ஆயிரம் வரும். மாதம் 25 ஆயிரத்திற்குள் வரும். எந்தப் பகுதியில் ஓட்டி வருகிறேன் என்றால் கத்தேரியில் ஓட்டி வருகிறேன். அது எந்த பஞ்சாயத்துக்கு உட்பட்டது என்றால் தட்டாங்கட்டை பஞ்சாயத்துக்கு உட்பட்டது. வீட்டில் 8 தறி வைத்துள்ளதற்கு பஞ்சாயத்தில் வரி செலுத்தி வருகிறேனா என்றால் செலுத்தி வருகிறேன். அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முழுக்க முழுக்க தறி வேலைதான் செய்து வருகிறேனா என்றால் விவசாயமும் செய்து வருகிறேன். நிலம் யார் பெயரில் உள்ளது என்றால் 3/4 ஏக்கரா என் அப்பா பெயரில் உள்ளது. நிலத்தை என் அப்பாதான் பார்த்து வருகிறாரா என்றால் என் அப்பா இல்லை. நான்தான் பார்த்து வருகிறேன். எத்தனை பேர் வாரிசுகள் என்றால் நானும், அக்காவும் இருக்கிறோம். நிலத்திற்கு கந்தாய வரி செலுத்தி வருகிறேனா என்றால் ஆமாம். கந்தாய ரசீது, பட்டா, அடங்கல் போன்ற ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2 ஆம் எதிர்மனுதாரர் பதிலுரையில் என்ன சொல்லியுள்ளார் என்பதை வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பதிலுரையில் தெரிந்து கொண்ட விவரத்தை நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாணப் பத்திரிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- Subramani

**Sd/- M. Mekala Mythili,**
**Subordinate Judge,**
**Sankari.**